www.tamilarangam.net

# தமிழ் ஈழ இராணுவம்

## TAMIL EELAM ARMY

## விடுதலைப்போராட்டத்தைப் பின்னடையச் செய்யும்செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தலைவர் திரு. சிறி சபாரத்தினம் அவர்கள் உட்பட நூற்றுக்கும் அதிகமான விடுதலைப்போராளிகளும், பொதுமக்களும் திட்டமிடப்பட்ட முறையில் கொலை செய்யப்பட்ட சம்பவத்தினை தமிழ் ஈழ இராணுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

சிங்கள இனவெறி பாசிச அரசு, வெளிநாட்டு பிற்போக்குச் சக்திகளின் உதவியுடன், ஆதரவையும் பெற்று அப்பாவித்தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்றொழித்தும், விடுதலைப்போராளிகளையும் சாதாரண இளைஞர்களையும் ஆயிரக் கணக்கில் சித்திரவதை முகாம்களில் கொடுமைப்படுத்தும் இவ்வேளையில், தமிழ் ஈழ விடுதலை அமைப்புகள் இரண்டு தம்மிடையே மோதிக்கொள்வது, இப் பாசிச அரசுக்குச் சாதகமாகவும், தமிழ் மக்களுக்குப் பாதகமாகவும் அமைந்துள்ளது. கொலைகளைச் செய்துவிட்டு, 'அரசியல் ரீதியான காரணங்கள்' எதுவுமின்றிப் போலிக்குற்றச்சாட்டுக்களை முன்வைத்துத் தமிழ் ஈழ மக்களைத்திசை திருப்ப முயல்வதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரசியல் தெளிவற்றவர்களின் கையில் இருக்கும் ஆயுதம் சக இயக்கத் தோழர்களையே அழித்துவிடும் இந்த நேரத்தில், ஆயுதம் ஏந்துவோர் தன் எதிரி யார்? நண்பன் யார்? என்பதில் தெளிவாகஇருப்பது அவசியம் என்பதை வலியுறுத்துகிறோம். ஏனெனில் முதலில் எதிரி யார்? நண்பர் யார் என்பதைக் கண்டுகொள்ளாதவரை ஏந்தும் ஆயுதம் எந்த நேரமும் எமது மக்களுக்கு எதிராகவும் பிரயோகிக்கப்படலாம்.

இச்சம்பவங்கள் கூட்டுமொத்தமான தமிழீழ விடுதலைக்கு முட்டுக் கட்டையாகவே அமையும். ஒரு இயக்கத்தலைவரையோ, அல்லது இயக்கத்திற்கு விசுவாசமான ஒரு உறுப்பினரையோ அழிப்பதன்மூலம் இயக்கத்தையே அழித்துவிடலாம், என நினைப்பது பிழையான அரசியல் சித்தாந்தமாகும். இப்படியான பழிவாங்கலுடன் சம்பந்தப்பட்டவர்கள் 'இச்சம்பவங்கள் பிழையானது' என, மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

தவறுகளை இனங்கண்டு கொள்வதும் அதிலிருந்து திருந்திக்கொள்வதும் இல்லாமல், எந்த விடுதலை இயக்கமும் தனது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதில் முன்னேற முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாழ் கோட்டை முகாம் தாக்குதலை உரிமை கோருகிறோம்.

விடுதலை இயக்கங்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்ட சமயம், யாழ் கோட்டையில் முகாமிட்டிருக்கும் சிறீ லங்காவின் கூலிப்படையினர் தமிழீழ மக்களை தாக்கும் நோக்குடன் முகாமை விட்டு வெளியில் வந்தபோது தமிழ் ஈழ இராணுவத்திற்கும், சிறீ லங்கா கூலிப்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் கூலிப்படையினர் பலத்த காயங்களுடன் திரும்பவும் தமது முகாம்களுக்குச் செல்லவேண்டி நேரிட்டது. இம் மோதலில் எமது உறுப்பினரான 'வேந்தன்' என்பவருடன் மற்றும் ஆறு உறுப்பினர்கள் வீர மரணம் அடைந்தனர். இவர்களுக்கு எமது வீர அஞ்சலிகளைச் செலுத்துகிறோம். சிறீ லங்கா கூலிப்படையினரின் மோட்டர் 'செல்' வெடிப்பினால் வீர மரணம் எய்திய எமது வீரர்களுக்கு என்றும் எமது சிரம் தாழ்த்திய வணக்கம் உரித்தாகும்.

## THE TIMES

The two infantry battalions that "police" Jaffna are pinned down in a state of continuous siege. Most of them are based in the Dutch fort. Inside, there is much brave talk. Sandhurst men refer to the degree of "control" they have over Jaffna. But the reality is somewhat different.

"Two hundred yards is all we'll manage," said the young captain who led us out on a foot patrol. Our three Land-Rovers,, covered in half-inch steel plate and festooned with gas-grenade launchers, inched past coils of barbed wire and over concrete barriers. Outside, the town was silent and deserted. The only movement was the lapping of small waves in the lagoon, and the lazy circling of buzzards in the hot air above.

On a whispered order the soldiers spilled from the vehicles and took cover behind a ruined warehouse. We were perhaps a hundred feet from the huge walls of the fort. The captain barked another order, and we ran forward, dashed across a roadway, and leapt behind the shelter of the sea wall.

We paused. An officer's arm waved us forward, and we crept on. Another 20 yards. Another ten. Another ten. And then, suddenly, a burst of automatic fire, and the rushing butterfly whirr of a passing bullet. A crump of a mortar launch, a long pause, a huge explosion nearby.

More small arms fire. Shouts, explosion, orders. The crackle of radios. Then silence.

"You see. You see." said the captain. "Two hundred yards. That's as far as we can get."

A van lurched out of a side street and headed towards our road, and the causeway to Mandaitivu island. More orders were screamed, soldiers stopped the van and forced all the occupants to stand at the roadside.

"Lucky for us," smiled the captain. "Good tactical position." We retreated under cover of these civilians, huddling behind the sarongs of a group of old men.

One of the soldiers stood up suddenly and fired a magazine into the distance, causing the old men to cringe. Then there was return fire and a huge explosion which we learned later was a mortar meant for us, but it had exploded in the tube and killed seven of the Tamil guerrillas.

## மண்மீட்பு இல்லையேல் வீர உயிர் துறப்பு.

தமிழ் ஈழ ராணுவம் (T. E. A.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்